

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | டிசம்பர் 08, 2022 | புரட்சி 21 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00


## இராமனுக்கு 2000 கோடி சாலை

அயோத்தி ‘இராமனு’க்கு அடிக்குது ‘லாட்டரி’; சர்வதேச சுற்றுலா கதாநாயகனாக மாறப் போகிறார் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, உ.பி. காவிச் சட்டை ஆதித்யநாத் என்பவருக்கு முதலமைச்சர் என்ற பெயரும் உண்டு. இராமன் தரிசனத்துக்கு கோயிலைச் சுற்றி அமையப் போகும் சாலைக்கு அவரது இராமராஜ்ய உ.பி. ஆட்சி ஒதுக்கியுள்ள தொகை **2000 கோடி ரூபாய்.**

மக்கள் வரிப் பணத்தில் மக்களுக்கான திட்டங்களுக்கு ‘டாட்டா’ காட்டிவிட்டு, 2000 கோடியை கோயிலுக்கு சாலை போட கொட்டி அழும் ஆட்சியை உலகில் எங்கேயாவது பார்த்திருக்க முடியுமா? இது அந்த இராமனுக்கே அடுக்காது” என்று எதிர்க் கேள்வி கேட்கக் கூடிய மக்கள் அங்கே இல்லை. ‘இந்துத்துவ மாடல்’ இப்படித் தான் சேறு வாரி பூசிக் கொண்டு ஆட்டம் காட்டும்!

உ.பி. மாநிலமே ‘இராமனுக்கு’ பட்டா போட்டாகி விட்டது. இனி அடுத்தடுத்து கீழ்க்கண்ட திட்டங்களும் வரலாம்.

- சர்வதேசப் பயணிகளை கோயிலுக்கு வரவேற்க அனுமார் படை உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் தரப்படும். திறமையுள்ள அமைச்சர்கள் பயிற்சி யாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.
- நீட் தேர்வு இரத்து செய்யப்படும்; அதற்கு மாற்றாக ‘ஸ்ரீ ராம ஜெயம்’ அதிக எண்ணிக்கையில் எழுதினாலே போதும்.
- இராமனின் ‘டாடி’ மிஸ்டர் தசரத மகாராஜா, இராமன் பிறப்புக்காக நடத்திய அசுவமேத யாகம் (குதிரைகளோடு உறவு கொள்வது) காட்சிப்படுத்தப்பட்டு செக்ஸ் திரில்லர் படமாக மெய் சிலிர்க்க திரையிடப்படும்.
- சீதை தனது சத்தியமான ‘கற்பை’ நிரூபிக்க, இராமனுக்காக தீக்குளித்து உயிர் மீண்ட காட்சிகளும் சூத்திரன் ‘சம்பூகன்’ இராமனால் ஆணவப் படுகொலை செய்யப்பட்ட திகைப்பூட்டும் காட்சிகளையும் காணத் தவறாதீர்கள் என்று விளம்பரமும் அரசு செய்தித் துறை சார்பில் வெளியிடப்படலாம்.
- சட்டமன்றத்தில் இராமனுக்கு தனி நிதிநிலை அறிக்கைத் தாக்கல் செய்யப்படும். இராம பக்தர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் புதிய இலவச திட்டங்கள் அறிவிக்கப்படும். இதற்காக உழைக்கும் மக்கள் தலை மீது சிறப்பு வரிகள் போடப்படும்.
- ‘ஸ்ரீராம பஜனைக் குழு’ உருவாக் கப்பட்டு அதில் மோடி, ஆதித்யநாத் கீர்த்தனைகளும் உரிய தாளக்கட்டு, பக்க வாத்தியங்களுடன் இசைக் கப்படும். மக்கள் வாழும் ‘பள்ளம் படு குழி’ சாலைகளிலும் இந்த பஜனைக் குழு பயணித்து கடைசியாக, இராமன் கோயில் நோக்கி 2000 கோடி சிறப்பு சாலையை வந்தடையும்.
- 4 ஆண்டுகள் இராமன் செருப்பு ‘அரசனாக’ ஆட்சி செய்த வரலாற்றுப் பெருமையை விளக்கும் வகையில் செருப்பு – மாநில அரசின் தேசிய சின்னமாக்கப்படும்.

– இப்படி ஆதித்ய நாத்தின் அடுத்தடுத்த அதிரடியாக அறிவிக்கக் கூடும். நம்புங்கள்!

இந்துத்துவ மாடலில் இதெல்லாம் சாதாரணமப்பா!

**– கோடங்குடி மாரிமுத்து**

# எட்டு ஆண்டுகளாக உயர் கல்வியில் பா.ஜ.க.வின் படுபாதகச் செயல்கள்

**ம.கி. எட்வின் பிரபாகரன்**

“2014இல் ஆட்சிக்கு வந்த பாஜக இந்த எட்டு ஆண்டுகளாக உயர் கல்வியில் செய்த அட்டூழியங்கள் ஏராளம். டெல்லி பொருளாதாரக் கல்லூரி பேராசிரியர் நந்தினி சுந்தரும், டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் கவுஹர் ஃபஸ்லியும் இணைந்து, ஜூன் 2020 வரை நடந்த அதிகார அத்துமீறல்களை, ஆய்வறிக்கையாக வெளியிட்டனர். தற்போது அந்த ஆய்வறிக்கையோடு புது தகவல்களை சேர்த்து, செப்டம்பர் 2022 வரை நடந்த சீர்கேடுகளையும் உள்ளடக்கியதாக விரிவாக்கப்பட்டுள்ளது. வேறு நால்வர் இப்பணியை செய்துள்ளனர். 6 பகுதிகளாக இந்த கொடுங்கோன்மைகள் பிரித்து விளக்கப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக இங்கு பார்க்கலாம்.

1. **பல்கலைக்கழக பாடத் திட்டத்தில் தலையீடு:** சிந்தனையாளர் காஞ்சா அய்லையா எழுதிய ‘நான் ஏன் இந்து அல்ல?’, அருந்ததி ராய் எழுதிய ‘தோழர்களுடன் ஒரு பயணம்’, நாவலாசிரியர் பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொருபாகன்’, எழுத்தாளர் பாமா சூசைராஜ் எழுதிய ‘சங்கதி’, சுகிர்த ராணி எழுதிய ‘கைம்மாறு’, ‘என் உடல்’, ராமானுஜன் எழுதிய ‘300 இராமாயணங்கள்’ உள்ளிட்ட 17 புத்தகங்கள் பாடத் திட்டங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இத்தகைய நீக்கங்கள் சுமூகமாக நடைபெற்றதில்லை. மிரட்டல்களின் மூலமாகவும், வன்முறை சம்பவங்களின் மூலமாகவும் தான் நீக்கங்கள் நிகழ்ந்துள்ளன. மன்னர் சிவாஜியைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நூலை, பாடத்திட்டத்தில் இருந்து நீக்கக் கோரி, பந்தர்க்கர் கல்லூரியின் நூலகமே சூறையாடப்பட்டுள்ளது. இத்தகைய காரியங்களைச் செய்வதற்காகவே, மாணவ குண்டர்களான ஏபிவிபியினர் (அகில இந்திய வித்யாதி பரிஷத்) ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கின்றனர்.
2. **கல்லூரிகளில் பேராசிரியர்கள் நடத்தும் கருத்தரங்கங்களுக்கு அனுமதி மறுப்பு:** மக்களாட்சி தத்துவம், மனித உரிமைகள், காஷ்மீர் பிரச்சனை - அரசியலமைப்பு சார்ந்த எந்த ஒரு முற்போக்கான கருத்தரங்கங்களும், கல்லூரி வளாகத்துக்குள் நடந்துவிடாதபடி, ஆர்எஸ்எஸ் மாணவர்கள் தொடர்ச்சியாக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனவரி 2016ல் “The Wire” ஆங்கில செய்தி இணையதளத்தின் உரிமையாளர் சித்தார்த் வரதராஜன், அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பங்கேற்கவிருந்த நிகழ்ச்சியை, ஏபிவிபி தீவிரவாதிகள் அச்சுறுத்தி நடக்க விடாமல் நிரந்தரமாக நிறுத்தினர். இந்த ஆண்டு (2022) மே மாதத்தில், ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கவிருந்த நிகழ்ச்சியையே தடுத்து நிறுத்தும் அளவிற்கு வெறியாட்டங்களில் ஆர்.எஸ்.எஸ். கும்பல்கள் ஈடுபட்டனர். இதுபோல 73 கல்லூரி நிகழ்ச்சிகளை இந்த எட்டு ஆண்டுகளில் கலவரங்களின் மூலம் தடுத்துள்ளனர். இது எந்த “ஜனநாயக” நாட்டிலும் நடக்காத அநியாயம்.
3. **பேராசிரியர்கள் கைது:** பேராசிரியர்கள் சாய் பாபா, மகேஷ் சந்திரகுரு (ராமனை அம்பலப் படுத்தியதற்காக), ஜீத்ரா ஹன்ஸ்டா (மாட்டுக்கறி விழாவை ஆதரித்து ஃபேஸ்புக்கில் எழுதியதற்காக), நந்தினி சுந்தர், பாப்ரி, சவுரதீப் சென்குப்தா (சனாதன தர்மத்தை எதிர்த்து வகுப்பில் பேசியதற்காக, ஏபிவிபி மாணவர்களின் குற்றச்சாட்டின் பெயரில் எஃப்.ஐ.ஆர். போடப்பட்டு கைது செய்யப்பட்ட பேராசிரியர்), ஷில்பா சிங் (தாலியை விமர்சித்து பேஸ்புக்கில் எழுதியதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது), ஜிதேந்திர குமார் (கடவுள்கள் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதை எடுத்துக் காட்டியதற்காக), ரதன் லால் (சிவலிங்கத்தை விமரிசித்து பேசியதற்காக), பீமா கோரிகன் பொய் வழக்கில் சோமா சென், சுதா பரத்வாஜ், ஆனந்த் டெல்டும்டே ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறாக 12 பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆய்வறிக்கை கூறுகிறது.
4. **ஆசிரியர்கள் / மாணவர்கள் மீதான தாக்குதல்கள்:** 2015 ஆகஸ்ட் மாதத்தில் பேராசிரியர் கல்புர்கி ஹிந்துத்துவ பயங்கரவாதி களால் சுட்டுக் கொல்லப் பட்டார்; லக்னோ பல்கலைக்கழக பேராசிரியர் ராஜேஷ் குமார் தாக்கப்பட்டார். வாஜ்பாய்க்கு எதிராக பேஸ்புக்கில் பதிவு எழுதியதால் பேராசிரியர் சஞ்சய் குமார் தாக்கப்பட்டார். பேராசிரியர் தினேஷ் குப்தாவை, ஏபிவிபி மாணவர்கள் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்தனர். பேராசிரியர் கிரீன் பக்சி முகத்தில் கரி பூசப்பட்டு, மாணவர்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். 2019இல் ஃபெரோஸ் கான் என்கிற இஸ்லாமிய பேராசிரியரின் சமஸ்கிருத வகுப்புகளை சங்கி மாணவர்கள் கூண்டோடு புறக்கணித்தனர். ஃபெரோஸ்கானுக்கு ஆதரவாக செயல்பட்டதால் பேராசிரியர் சாந்தி லால் சல்வி, ஜாதி ரீதியான வசைச் சொற்களுக்கு ஆளானார்.

   செப்டம்பர் 2014இல் ஜாதவ்பூர் பல்கலைக்கழக மாணவி, ஆண்கள் விடுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, ஆர்எஸ்எஸ் மாணவர்களால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார். நாட்டை உலுக்கிய ரோகித் வெமுலாவின் தற்கொலைக்கும் காவிகளே காரணமாக இருந்தனர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக விடுதியில், ராமநவமியன்று அசைவ உணவு சமைக்கப்பட்டதை எதிர்த்து, சனாதன மாணவர்கள் தகராறில் ஈடுபட்டனர். இதில் 6 பேர் காயமடைந்தனர். 8 ஆண்டு பாஜக ஆட்சியில், ஆசிரியர்கள் மீது 12 முறையும், மாணவர்கள் மீது 37 முறையும் தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. பதிவாகாத வன்முறைகள் இதை விட பலமடங்கு கூடுதலாக இருக்கும்.
5. **பணி நீக்கங்களும் இடைநீக்கங்களும்:** வரலாற்று அறிஞர் ராமச்சந்திர குஹா, பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனத்தில் (IISC) அறிவியல் இருக்கையில் (Science chair) அமர வைக்கப்பட்டதை எதிர்த்து, காவிகள் தீவிரமாக போராடினர்; அதற்கு அடுத்த மூன்று மாதத்திற்குள் அகமதாபாத் பல்கலைக்கழகத்தில் அவருக்கு கிடைக்கவிருந்த பேராசிரியர் பொறுப்பையும் அவரே நிராகரிப்பதற்கு பாஜகவின் அராஜகப் போக்கே காரணமாக இருந்தது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், லவ்லி ப்ரொஃபஷனல் பல்கலைக்கழகப் பேராசிரியர் குர்சங் ப்ரீத் கவுர், ராமனையும் ராவணனையும் பற்றி ஆன்லைன் வகுப்பில் பேசியதற்காக வேலையில் இருந்து நீக்கப்பட்டார்.

   கேரள மத்தியப் பல்கலைக்கழகத்தில் ஒரு ஆன்லைன் வகுப்பில் கில்பர்ட் செபாஸ்டின் என்கிற பேராசிரியர், சங் பரிவார் அமைப்புகளை “பாசிச அமைப்புகள்” என்று கூறியதற்காக இடைநீக்கம் செய்யப்பட்டார். இந்த இடை நீக்கத்திற்கு எழுந்த எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் மீண்டும் பணியமர்த்தப் பட்டார். சென்னை ஐஐடியில் காரணம் ஏதும் கூறப்படாமல், “அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டம்” (APSC) தடை செய்யப்பட்டு, பின் எதிர்ப்புகளை கண்டு அஞ்சி, தடை விலக்கப் பட்டது. அதேபோல் கராக்பூர் ஐஐடியிலும் “அம்பேத்கர் பகத் படிப்பு வட்டம்” தடை செய்யப்பட்டு, பின் எதிர்ப்புகளால் பின்வாங்கப்பட்டது. இது போல் 13 நீக்கங்களும், 20 இடை நீக்கங்களும் நடைபெற்றுள்ளன.
6. **வெளிநாட்டு கல்வியாளர்களுக்கு, விசா நிராகரிப்பு:** நாளந்தா பல்கலைக்கழகத்தில் ஆர்எஸ்எஸ் எதிர்ப்பின் காரணமாக, யோகா கற்றுக் கொடுக்கும் ஒப்பந்தத்தை நீட்டிக்காமல் Patricia Sauthoff என்ற வெளிநாட்டவர் நீக்கப்பட்டார். கடந்தாண்டு செப்டம்பரில், 50க்கும் மேற்பட்ட அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் ஆதரவோடு நடைபெற்ற “Dismantling Global Hindutva (உலகளாவிய இந்துத்துவ தகர்ப்பு)” கருத்தரங்கத்தில், இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட கல்வியாளர்கள் கடுமையான மன உளைச்சலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப் பட்டனர். பாகிஸ்தானில் பட்டப்படிப்பை முடித்த இந்திய குடிமக்கள் யாருக்கும், இந்திய நாட்டில் வேலை வாய்ப்பையோ மேற் படிப்பையோ மேற்கொள்ளத் தகுதி கிடையாது என்ற பொது அறிவிப்பு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 20 முறைக்கும் மேல், வெளிநாட்டுக் கல்வியாளர்கள் இந்தியாவுக்குள் நுழையவிடாமல், முற்போக்கு உரையாற்றுவதில் இருந்து தடுக்கப்பட்டுள்ளனர். எனவே, மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இந்த நாடு இருப்பதை, அனைவருக்கும் அறியச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.”

## இடஒதுக்கீட்டை குழி பறிக்கும் அய்.அய்.டி.யின் புதிய கொள்கை

சென்னை ‘அய்.அய்.டி.’ பார்ப்பனர் கோட்டை யாகவே இருந்து வருகிறது என்பதற்கு மேலும் சான்றுகள் குவிந்து வருகின்றன. 577 பேராசிரியர்களில் பட்டியல் பிரிவு மற்றும் பழங்குடியைச் சார்ந்தவர்கள் 19 பேர் மட்டுமே (மூன்று சதவீதம்) என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் கூறுகிறது.

2021 மார்ச் 31 நிலவரப் படி திறந்த போட்டிக்கான இடங்களில் 515 பேராசிரியர், இணைப் பேராசிரியர்கள் இருந்தனர். இதில் பிற்படுத்தப் பட்டோர் 62 பேர் மட்டுமே. பட்டியல் மற்றும் பழங்குடிப் பிரிவினர் 16 பேர் தான்.

ஆய்வுப் பட்டப் படிப்பைப் பொறுத்த வரை 2018-2019, 2019-2020இல் 196பேர் மட்டுமே பெண்கள்; பிற்படுத் தப்பட்டோர் 74; பொருளாதாரப் பின்தங்கிய பிரிவினர் 74; எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவினர் முறையே 27 மற்றும் 5 பேர் மட்டுமே. பெண்களும் முற்றாக புறக்கணிக்கப்படுகின்றனர்.

2021-2022ஆம் ஆண்டு துறைரீதியாக விவரங்களைத் தர, தகவல் துறை ஆணையர் மறுத்து விட்டார். இட ஒதுக்கீடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாதது குறித்து யாரிடம் விளக்கம் கேட்பது என்று வினோத் குமார் என்பவர் கேட்ட தகவலுக்கு இதற்கு பதில் தர வேண்டும் என்று தகவல் உரிமை கேட்பு சட்டத்தின் (2எப்) பிரிவில் விளக்கம் ஏதும் தரப்படவில்லை என்று ஆணையர் பதிலளித்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சகம் இப்போது இடிஒதுக்கீட்டில் பின்பற்ற வேண்டிய வழிமுறை குறித்து புதிய விளக்கம் தந்து பட்டியல் இனப் பிரிவினருக்கு மகத்தான துரோகம் செய்துள்ளது.

அய்.அய்.டி. இட ஒதுக்கீட்டுக்கான இடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்யாமைக்குக் காரணம் அய்.அய்.டி.யின் புதிய பணி நியமனக் கொள்கை. எஸ்.சி. - எஸ்.டி. இடங்களைப் பூர்த்தி செய்யும் போது நிர்வாகத் திறமையுள்ளவர்களா என்பதை கவனத்தில் கொண்டு தான் நிரப்ப வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

ஒடுக்கப்பட்டோர் இடங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் திறந்த போட்டியில் ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. இடங்களும் மிகக் குறைவாக உள்ள நிலையில் 10 சதவீத உயர்ஜாதி ஒதுக்கீட்டுக்கு என்ன அவசியம் இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

# வீட்டுப் பாடக் குறிப்பேடுகளில் (டைரி) ஜாதி கேட்கும் பள்ளிகளைக் கண்டித்து கோவையில் ஆர்ப்பாட்டம்




கோவை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகள் மாணவர்களின் சாதி, மதங்களை அடையாளப்படுத்தும் விதமாக மாணவர்கள் பயன்படுத்தும் தினசரி வீட்டுப்பாட டைரியில் “ஐடென்டி சர்டிபிகேட்” என்ற பெயரில் சாதி, மதம் ஆகியவற்றை விவரக்குறிப்பேட்டில் பதிவிட ஒரு பகுதியை உருவாக்கி கட்டாயமாக பதிவிட வலியுறுத்தி வருகிறது. அதேபோல பெரும்பாலான பள்ளிகளில் சாதி பெயர்களைப் பதிவிடுவதுடன் எஸ்சி, எஸ்டி, எம்பிசி, ஓசி (SC, ST, MBV, OC) என பிரித்து பதிவிட வலியுறுத்துகிறது. இந்நிலையில் இந்த சம்பவங்கள் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் சாதி, மத உணர்வைத் தூண்டுவதாக உள்ளது என திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய தனியார் பள்ளிகளின் செயல்பாடுகளைக் கண்டித்தும், மாணவர்களின் அடையாள குறிப்புகளில் சாதி, மதம் அடை யாளம் கேட்பதைத் தடை செய்ய வலியுறுத்தியும், 2021 ஆகஸ்ட் 12 ஆம் தேதியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநகரத் தலைவர் நேருதாஸ் கோவை ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தார். அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதி அவர் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், பள்ளி கல்வித்துறையின் முதன் மைச் செயலாளர், பள்ளி கல்வி இயக்குநரகம் ஆணையர் ஆகியோரிடமும் மனு அளித்தார். இதைத்தொடர்ந்து மீண்டும் நடப் பாண்டு அக்டோபர் 7 ஆம் தேதியன்று முதல்வர், பள்ளிக்கல்வித்துறை, சமூக நீதி கண்காணிப்பு குழு, மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு சாதி, மத அடையாளங்களை நீக்க வேண்டும் என வலியுறுத்தி மனு அளித்தார்.

இந்த மனுவிற்குப் பதிலாக சமூக நீதிக் கண்காணிப்பு குழுவின் தலைவர் சுப.வீரபாண்டியன், பள்ளிக்கல்வித்துறையின் முதன்மைச் செயலாளருக்கு தனியார் பள்ளிகளில் மாண வர்களின் விவரக் குறிப்பேட்டில் உள்ள சாதி, மத அடையாளங்கள் குறிப்பிடுவதைத் தடை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத் தார். இதைத் தொடர்ந்து செப்டம்பர் மாதம் கோவை மாவட்ட கல்வி அலுவலர், பேரூர் அலுவலகத்திலிருந்து புகார் மனு தொடர் பாக சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர்களிடம் விவரங்கள் கேட்கப்பட்டது என்றும், இட ஒதுக்கீடு மற்றும் கல்வி உதவித்தொகைகள் ஆகியவற்றை சட்டப்படி பெற்று மாண வர்களுக்கு வழங்குவதற்கு தேவையான விபரங்கள் மட்டுமே கோரப்பட்டது என்றும், பள்ளி முதல்வர்கள் தெரிவித்ததாக மாவட்ட கல்வி அலுவலகம் தெரிவித்ததுடன் உங்கள் கோரிக்கை மறுக்கப்படுகிறது என்றும் பதிலளித்துள்ளது. இதைத்தொடர்ந்து மீண்டும் நேருதாஸ் பள்ளியில் சாதி, மத அடையாளங்களை வெளிப்படையாக மாணவர்கள் பயன்படுத் தும் அடையாள சான்றிதழில் பதிவிடுவது தவறு என குறிப்பிட்டு பள்ளிகளின் பட்டியல்களை வெளியிட்டுள்ளார். இதுகுறித்த செய்திகள் பரவியதை தொடர்ந்து மாணவர்களின் வீட்டுப்பாட குறிப்பேட்டில் சாதி, மத விவரங்கள் கோரும் பகுதியை நீக்கிவிடுகிறோம் என்று ஒன்றிரண்டு பள்ளி நிர்வாகங்கள் மட்டுமே உத்திரவாதம் அளித்தன. தொடர்ந்து சின்மயா வித்யாலயா, நேரு மகா வித்யாலையா, வித்யா விலாஸ், சவ்ரா வித்யாலையா, நாகினி வித்யாலையா, ஜே.சி மெட்ரிகுலேசன், காந்தியடிகள் மெட்ரிகுலேசன், வேல் இன்டர்நேஷனல் உள்ளிட்ட பல பள்ளிகளில் அதே நிலை தொடர்ந்து வருகிறது.

இதைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தோழமை அமைப்புகளை திரட்டி, சட்ட எரிப்பு நாளான நவம்பர் 26 அன்று கோவையில், தீண்டாமை ஒரு பெரும் குற்றம் என பாட நூல்களில் முதல் பக்கத்தில் அச்சிட்டு விட்டு மாணவர்களின் வீட்டுப் பாட கையேடுகளில் ஜாதி அடையாளங்களைக் குறிப்பிட்டுச் சொல்லும் தனியார் பள்ளிகளையும் , பள்ளி கல்வித் துறையையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநகரத் தலைவர் நேருதாஸ் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்தார். ஜெயந்த் - மாநகரத் துணைச்செயலாளர், வெங்கட் - துணைத் தலைவர் மாநகரம், இயல் - உடுமலை திவிக பொருப்பாளர், சோலார் ரஞ்சித் - ராம் நகர் பகுதி திவிக ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

தொடர்ந்து, சாஜித் - தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித்தமிழன் - திராவிடத் தமிழர் கட்சி, பிரபாகரன் - திராவிடர் கழக மாநில இளைஞரணி , மலரவன் - புரட்சிகர இளைஞர் முன்னணி, அகத்தியன் - தமிழ் சிறுத்தைகள் கட்சி, முருகன் - தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், கோபால் - ஆதித்தமிழர் பேரவை, ஜூலியஸ் - மக்கள் அதிகாரம், குரு - விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ஜீவா - மே 17 இயக்கம், கோபிநாத் - திராவிட இயக்க தமிழர் பேரவை, சந்தானம் - சி பி ஐ எம் எல் லிபரேஷன், சி கே சுப்பிரமணியம் - சி பி ஐ எம் எல் ரெட் ஸ்டார், கதிரவன் - குத்தூசி குருசாமி படிப்பகம், அசார் - இந்திய மாணவர் சங்கம், ராகுல் திராவிடர் மாணவர் கழகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். தமிழ்நாடு மாணவர் கழகம் பொள்ளாச்சி சபரி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 60க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டு தனியார் பள்ளிகளை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

## நாம் இருவர் ; நமக்கேன் இன்னொருவர் ?



முன்பெல்லாம், நாம் இருவர், நமக்கு மூவர் என்று சொன்னோம். அது படிப்படியாக குறைந்து நாம் இருவர், நமக்கு இருவர். இப்பொழுது நாம் இருவர், நமக்கு ஒருவர், நாளைக்கு இதுவும் மாறலாம், நாம் இருவர், நமக்கேன் இன்னொருவர். நான் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை.

இப்படி எல்லாம் பிரசாரம் இருக்கிறது. இதையெல்லாம், சீர்தூக்கிப் பார்த்து, நாட்டினுடைய நன்மை கருதி, குடும்ப சூழ்நிலையைக் கருதி, நீங்கள் உங்கள் செல்வங்களைப் பெற்று அதற்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இல்லற வாழ்வில் நீங்கள் சமத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், சமத்துவத்தை, சமூகநீதியை நீங்கள் கடைபிடிக்க வேண்டும் என்று ஏதோ முதலமைச்சராக அல்ல, உங்களுடைய தந்தை என்கின்ற அந்த இடத்தில் இருந்து உங்களை அன்போடு கேட்டு கொள்கிறேன்.

**அறநிலையத்துறை சார்பில் 31 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து முதலமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து.**

### ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ நூல் திறனாய்வு: அஜிதா பேச்சு

# பெரியார் தொடங்கிய பார்ப்பனரல்லாதார் இயக்கமே ஆர்.எஸ்.எஸ். உருவாகத் தூண்டியது

*கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில், மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு 19.11.2022 அன்று மாலை 6 மணியளவில், தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம்’ நூல் மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டது. வழக்கறிஞர் அஜிதா, நூலை திறனாய்வு செய்து உரையாற்றினார்.*

ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம் என்ற புத்தகத்தை நாம் படித்தால், இந்துத்துவா பற்றிய பார்வை நமக்கு சரியானதாக மாறும். தமிழ்நாட்டில் ஒரு கதை கூறுவார்கள், கண் பார்வை இல்லாதவர்கள் ஒரு பெரிய யானையைத் தொட்டுப் பார்த்துவிட்டு இது ‘தூண் போல இருக்கிறது’, ‘இது முறம் போல் இருக்கிறது’ என்று கூறுவார்கள். அதே போலத்தான் நாமும். ஆர்.எஸ்.எஸ் பற்றிப் பேசிக் கொண்டிருக் கிறோம். ஆனால், அதன் முழு உருவத்தையும், தோற்றத்தையும், வளர்ச்சியையும், பின்னணியையும், இன்றைக்கு அவர்கள் எப்படி ஆக்டோபஸ்போல எட்டுக் கால்களைப் போல தனது பகுதிகளை எப்படி விரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த புத்தகம் முழுவதுமாக கூறுகிறது. பத்து தலைப்புகள் கொண்ட இந்த புத்தகத்தை ‘கருஞ் சட்டைப் பதிப்பகம்’ ஏறக்குறைய பத்து புத்தகங் களாகக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை யோடு புத்தகத்தைப் பற்றி கூறத் தொடங்குகிறேன்.

1925 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாள் அந்த வருடம் அது ஒரு விஜயதசமி நாள். அன்றைக்குத் தொடங்கியது தான் ஆர்.எஸ்.எஸ். தொடங்கியவர் ‘ஹெட்கேவர்’ என்கிற சித்பவன் பார்ப்பனர். ஏன் சித்பவன் என்று குறிப்பிடுகிறேன் என்றால், ‘மராட்டிய மாநிலத்தில் உள்ள பார்ப்பனர்களிலேயே உயர்ந்த பார்ப்பனப் பிரிவினர் என்று அவர்களை அவர்களே கூறிக் கொள்கின்றனர். ஹெட்கேவர் 1925 இல் இருந்து 1940 வரை தலைமை தாங்குகிறார். 1925இல் ஒரு அமைப்பை துவங்குவதற்கு முன்னால் அவர் என்னவாக இருந்தார்? அவரவர்கள் அவர்களது கட்சி தலைவர்களைப் பற்றி பெரிதாக சொல்லிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் அதை நாம் வரவேற்கலாம். ஆனால், இந்த ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அவ்வளவு பொய்யாகவும், புரட்டாகவும், ‘காங்கிரஸ் கட்சியின் தீவிர உறுப்பினர், அவர் புரட்சிகர இயக்கங்களிலே பங்கு கொண்டார்’ என்றெல்லாம் அவரைப் பற்றி அவருடைய வாழ்க்கைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். அது மொத்தமாக ஒரு பொய். ஏனென்றால் அவரைப் பற்றி, காந்தியாருடன் மிக நெருக்கமாக இருந்தவரான, பியாரி லால், டி.ஆர்.கோயல் ஆகிய இருவரும் எழுதிய புத்தகத்தில் “இவர்கள் கல்கத்தாவிற்கு சென்று புரட்சிகர இயக்கத்திலே கலந்துகொண்டார் பங்கேற்றார் என்கிறனர். ஆனால், அதற்கான ஆதாரம் ஒன்றுமேயில்லை” என்று எழுதினார்கள். அது மட்டுமல்லாமல் அமெரிக்காவில் இருந்து ஜெ.ஏ.குரான் (cuarran) (குரான் என்றால் இஸ்லாமிய நூல் அல்ல) என்பவர் Militants of Hinduism என்ற ஆய்வு நூலை எழுதியவர். இந்துத்துவம் இந்தியாவில் எவ்வளவு மூர்க்கமாக இருக்கிறது என்பதை ஒன்றரை ஆண்டு காலம் ஆர்.எஸ்.எஸ். காரர்களோடு தங்கி எழுதிய புத்தகம். அவர் அந்த புத்தகத்தில் சொல்கிறார் ‘ஹெட்கேவர் என்கிற அவரது தலைவர் புரட்சிகர இயக்கங்களில் கலந்து கொண்டதாக எந்த வரலாறும், எந்த ஆதாரமும் இல்லை’ என்று.

அதற்கான நோக்கம் என்ன என்று பார்க்கும் போது மிக மிகத் தெளிவாக இருக்கிறது. காங்கிரசில் அப்போது ஒரு கொள்கை இருந்தது. காங்கிரசில் இருந்து கொண்டே அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.சில் இருக்கலாம். காங்கிரசில் இருந்து கொண்டே அவர்கள் இந்து மகா சபையில் உறுப்பினர்களாக இருக்கலாம். இந்த இரட்டை உறுப்பினர் பிரச்சினை காங்கிரசுக்குள் புயலைக் கிளப்பியது. 1934இல் ஒரு தீர்மானமாக நிறைவேற்றி காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் இந்து மகாசபையில் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள்.

அதற்கு முன்னால் ஹெட்கேவர் ஒரு அமைப்பை உருவாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி இவ்வாறு சொல்கிறார், “காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவால் நாட்டின் எழுச்சி குறைந்து வருகிறது. அதன் காரணமாக தீய சக்திகள் கொடூரமாக தலை விரித்து ஆடுகின்றன. தேசிய போராட்டம் உச்ச கட்டத்திற்கு வர வேண்டிய



நேரத்தில் ஒவ்வொருவருடைய பொறாமை உணர்ச்சிகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. எல்லா துறைகளிலும் தனிப்பட்ட தகராறுகளே இருக்கின்றது. பல்வேறு சங்கங்கள் இடையே மோதல்கள் ஆரம்பித்துவிட்டன. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதோர் போராட்டம் நடப்பது கண்கூடாகத் தெரிகிறது. யாவான் விஷ நாகங்கள் ஒத்துழையாமை இயக்கத்தைப் பயன்படுத்தி நாடெங்கும் கலவரங்களை நடத்துகிறது (யாவான் விஷ நாகங்கள் என்று இவர்கள் குறிப்பிடுவது முஸ்லீம்களை) என்று ஹெட்கேவர் வருத்தப்படுகிறார் சங்கங்களாக இருப்பவர்கள் இடையில் மோதல் இருக்கிறது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் என்கிற பிரச்சினை வருகிறது” என்கிறார்.

நாம் என்ன கவனிக்க வேண்டுமென்றால் அதே நேரத்தில் 1925ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாநாட்டில் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து வகுப்பு வாரி உரிமை கேட்டு தந்தை பெரியார் போர்க்கொடி உயர்த்துகிறார். 1925இல் இங்கு பார்ப்பனருக்கு எதிரான வேகமான தீர்க்கமான தெளிவான மாநாடு அதற்கான தீர்மானம். அங்கு ஹெட்கேவர் சொல் கிறார் இந்த நாட்டில் குழப்பம் வந்துவிட்டது சங்கங் களுக்குள் மோதல். பார்ப்பனர்-பார்ப்பன ரல்லாதார் பிரச்சினை தொடங்கி விட்டது’ என்கிறார். அப்படி யென்றால், ‘என் காலடியில் இருந்தவனெல்லாம் இப்போது பார்ப்பனரல்லாதவர் என்று சங்கம் வைத்துக் கொண்டெல்லாம் போராடுகிறார்கள்’. இப்போது ஒத்துழையாமை இயக்கம் வேகமாக வளர்ந்து வரும் நேரத்தில் இவருடைய வார்த்தைகளில் பார்த்தால் ஒத்துழையாமை இயக்கம் நாட்டின் எழுச்சியை ஒடுக்கி விட்டது என்கிறார். இதில் தெரிய வருவது என்னவென்றால், பார்ப்பனர் களும், பார்ப்பனரல்லாதவர்களையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பது தான். இப்போது இரண்டு நாட்களுக்கு முன் மோகன் பகவத் கூறுகிறார், “இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவரும் இந்துக்கள் தான். அவர்களின் மதத்திற்கு அப்பாற்பட்டு அவர்கள் இந்துக்கள் தான்” என்கிறார்.

- *ஹெட்கேவர் சுதந்திரப் போராட்ட வீரர் என்பதும் காந்தி கொலையில் ஆர்.எஸ்.எஸ். தொடர்பு இல்லை என்பதும் அப்பட்டமான பொய்.*
- *இந்து மகாசபையிலும் காங்கிரசிலும் இரட்டை உறுப்பினராக இருக்க காங்கிரஸ் தடை விதித்தது.*

எவ்வளவு ஆணவமான, அரசியல் சாசனத்திற்கு எதிரான வார்த்தைகள் என்று பாருங்கள். நான் பேசிக் கொண்டிருக்கும் இந்தப் புத்தகம் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களால் 1982இல் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட புத்தகம். கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதியது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

1925 முதல் 1940 வரை ஹெட்கேவர் தலைவராக இருந்தார். 1940 முதல் 1973 வரை கிட்டத்தட்ட 33 ஆண்டுகள் கோல்வாக்கர் தலைவராக இருந்திருக் கிறார். அவர் எழுதிய ‘The man and his mission’ புத்தகத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. “பாரதத் தேசம் என்பது இந்துக்களின் தேசம். இராஷ்டிரம் என்பது இந்துக்களின் இராஷ்டிரமே! இந்த அரசியல் உண்மையை உணராமல் பலர் நடித்துக் கொண் டிருக்கின்றனர். அந்த நடிப்புகளின் கற்பனையில் விழ டாக்டர் ஹெட்கேவர் தயாராக இல்லை. இதுதான் உண்மை. உண்மையை வெளிப்படையாகக் கூறுகிறோம். இந்துக்கள் மட்டுமே இந்துஸ்தானை விடுவிக்க முடியும். இந்துக்களின் சக்தி மட்டுமே இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். இந்த உண்மையி லிருந்து யாரையும் திசை திருப்ப முடியாது. எனவே இந்து இளைஞர்கள் ஒன்று திரட்டப்பட வேண்டும். வேறு வழியில்லை, ஆர்.எஸ்.எஸ் துவக்கப்பட்டது இதற்குத் தான். அந்த புனித நாள் 1925 ஆம் ஆண்டு விஜயதசமி நாள்” என்று எழுதுகிறார். இந்த இயக்கத்தைத் துவங்கியவர்கள் 5 பேர். டாக்டர் பி.எஸ்.மூஞ்சே, எல்.வி.பரஞ்சிபே, ஹெட்கேவர், தோல்கார், பாபாராவ் சாவர்க்கர். பாபாராவ் சாவார்க்கர் என்பவர் வீர் சாவர்க்கர் என்பவருடைய சகோதரர். அனைவருமே சித்பவன் பார்ப்பனர்கள்.

காந்தியைக் கொன்ற பிறகு ஆர்.எஸ்.எஸ். என்ன கூறியது, ‘எங்களுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. எப்போதுமே தொடர்பு இருந்தது இல்லை. கோட்சே எங்கள் அமைப்பில் இருந்ததே இல்லை. இந்து மகாசபையில் வேண்டுமானால் இருந்திருக்க லாம். இந்து மகா சபைக்கும் எங்களுக்கும் தொடர் பில்லை’ என்று கூறியது. ஆனால், மேலே கூறிய 5 பேர் தான் இந்து மகா சபையின் உயர்மட்ட தலைவர்கள். இந்த 5 பேர் தான் ஹெட்கேவரின் வீட்டில் கூடி 1925இல் ஆர்.எஸ்.எஸ் யை உருவாக்குகிறார்கள். எனவே இந்து மகா சபையும், ஆர்.எஸ்.எஸ்.யும் வேறல்ல.

இவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் மிகத் தீவிரமாக பங்கு கொண்டதாகக் கூறுகிறார்கள். அதைப் பற்றியும் இந்த புத்தகத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது. ‘இவர்கள் எல்லாம் சோரம் போன வீரர்களாக இருக்கிறார்கள்’. சிறையில் இருக்கும் போது கோல்வாக்கர், ‘நாங்கள் என்றைக்கும் உங்களின் (ஆங்கிலேயர்) கருத்துக்களுக்கு உடன்பட்டு அடிமைகளாக (slaves) இருப்போம்’ என்று எழுதினார். ’இங்கிருக்கும் மற்ற தலைவர்கள் காந்தி, நேரு போன்றவர்களைக் கேட்கிறேன், அவர்க ளெல்லாம் உங்கள் கருத்துகளைக் கேட்பவர்களாக இருக்கமாட்டார்கள். உங்களுக்கு நான் தான் சிறந்த அடிமையாக எப்போதும் இருப்பேன்’ என்று இப்படியெல்லாம் சிறையில் இருந்து பிரிட்டி ஷாருக்கு கடிதம் எழுதுகிறார்கள். இது எந்த சிறையில் இருந்து, எப்போது, யாருக்கு, யாரால் எழுதப்பட்டது என்று இந்த நூலில் தெளிவாக கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ் காரர்கள் இந்த நாட்டின் தேச பக்தர்கள் என்று கூறுவது போல அநாகரி கமான, அசிங்கமான பொய் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஏன் இவர்கள் பிரிட்டிஷாரை ஆதரிக்கிறார் களென்றால், மராட்டியத்தில் இஸ்லாமியர்களை வென்று பேஷ்வா, வீர சிவாஜி போல முஸ்லிம்களை வென்று ஒரு இராஜ்ஜியமாக மாற்றுவதற்காக இவர்கள் பிரிட்டிஸ்காரர்களை ஆதரித்தார்களாம். இதில் ஒரு உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிவாஜி சத்ரிய இனத்தில் பிறக்கவில்லை. பிறப்பில் சூத்திரர்; ஆட்சி உரிமை சூத்திரருக்கு இல்லை; சத்திரியருக்குத் தான் உண்டு. எனவே சிவாஜி முடிசூட பார்ப்பனர் எதிர்த்தனர். சிவாஜி காசிக்குச் சென்று அங்கே காகப்பட்டர் என்ற பார்ப்பனரிடம் 7000 தங்க காசுக்களை கொடுத்துத்தான் இவரை சத்தியராக மாற்றம் செய்ய மன்றாடுகிறார். இதற்காக 11000 பார்ப்பனர்களைக் கொண்டு வந்து பல கிராமங்களில் தங்க வைத்தார். நாட்டின் கஜானா காலியானது. மீண்டும் மீண்டும் சிவாஜி போருக்குச் சென்று உடல்நலம் பாதித்து தான் அவர் இறந்து போனார் என்பது வரலாறு. இப்படியான சிவாஜியை ஏன் இவர்கள் வீரனாகப் பார்க்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட சிவாஜியைப் போன்ற அடிமை இவர்களுக்கு வேண்டும் என்பதால் தான்.

காந்தியாரை கொலை செய்வதற்கு முன்னும் சரி பின்னும் சரி அந்த கொலை முயற்சிக்கும், கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ் - க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூச்சமே இல்லாமல் பொய் சொல்லியே வந்தார்கள். மொரார்ஜி தேசாயும், நேருவும் கூட காந்தியின் கொலைக்கு ஆர்.எஸ்.எஸ் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த இரண்டே மாதங்களில் இந்தியா முழுவதும், ஆர்.எஸ்.எஸ் காரர்கள் மேல் மட்டுமே 600 முதல் 700 வழக்குகள் வரை பதிவு செய்யப்படுகிறது. காந்தி கொலை வழக்கில் விசாரணை கமிசன் முன்னால் இந்தியப் புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் இப்படி கூறுகிறார். நேரு ஆர்.எஸ்.எஸ்.யை தடை செய்தே ஆக வேண்டும் என்று உறுதியுடன் இருக்கிறார். அதற்காக ஒரு ஆணையத்தையே அமைக்கிறார். புனேவில் உள்ள ஒரு மாவட்டக் காவல் தலைமை அதிகாரி, ‘இங்கே கலவரங்கள் அனைத்தும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் மட்டுமே நடத்தப்பட்டது’ என்று கூறியிருக்கிறார். இவர்களால் 5000-க்கும்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஈரோடு மாநகராட்சியில் யாக சாலைக் கூடமா? அகற்றக் கோரி கழகம் ஆர்ப்பாட்டம்: கைது




ஈரோட்டில் சட்டவிரோத வழிபாட்டுக் கூடத்தை (யாகசாலை) அகற்றும் போராட்டம் ஈரோடு மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 01.12.22 வியாழன் காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. இப்போராட்டத்திற்கு கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈஸ்வரன் தலைமை தாங்கினார். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான அரசு வளாகத்தினுள் சட்ட விரோதமாகவும், இந்திய அரசியல் சட்ட சாசனம் கூறும் மதசார்பற்றத் தன்மைக்கு எதிராகவும், தமிழ்நாட்டு அரசின் ஆணைகளை நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமலும் ஒரு குறிப்பிட்ட மதத்தின் வழிபாட்டுக் கூடத்தை (யாகசாலை) பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைத்து அங்கு மத விழா நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

இந்த சட்ட விரோத யாகசாலையை அகற்றக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் கழகத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது. மனு அளித்த பின்பும் அந்த துறை சார்ந்த அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் திராவிடர் விடுதலைக் கழகம் தாமே முன்வந்து அந்த யாக சாலையை அகற்றும் போராட்டத்தை நடத்தியது.

போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி வழங்காத நிலையில் காவல்துறையின் தடையையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் பன்னீர்செல்வம் பூங்கா அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து முழக்கங்களை எழுப்பிக் கொண்டே மாநகராட்சி வளாகத்தை நோக்கி சென்றனர். குழுமியிருந்த காவல் துறையினர் கழகத் தோழர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர். கைது செய்யப் பட்ட தோழர்கள் திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் : ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராஜ், மாநகரத் தலைவர் மரப்பாளையம் குமார், மாநகர செயலாளர் திருமுருகன், மாநகரத் துணைத் தலைவர் சத்தியமூர்த்தி, சென்னிமலை கோபிநாத், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, நாமக்கல் மாவட்ட துணை அமைப் பாளர் பிரகாசு, பெருந்துறை பழனிச்சாமி, திராவிடப் பேரவையைச் சேர்ந்த மாசிலாமணி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்பொழுது வரை அந்த சட்ட விரோத யாகசாலை அமைக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்தாத கடமை தவறிய அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாக கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

## நடராசன் முதல்வர் கனவில் வருவாரா?

- ♦ தில்லை நடராசன் கோயிலில் இருந்து அறநிலையத்துறை வெளியேற வேண்டும் என்கிறார் சுப்பிரமணியசாமி. நந்தன் கனவில் நடராஜன் வந்து சொன்னது போல் தமிழக முதல்வரிடம் கனவில் வந்து சொன்னால் பரிசீலிக்கலாம்.
- ♦ புதுச்சேரி கோயில் யானை மாரடைப்பால் மடிந்தது பக்தர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் சோகம் தான். காடுகளில் இயற்கையாக வாழும் விலங்குகளை கோயிலுக்குள் கொண்டு வந்து மதச்சாயம் பூசி மாரடைப்பால் மரணிக்க வைப்பது கொடுமை அல்லவா? எந்த ஆகமத்தில் யானையைக் கோவிலுக்குள் பயன்படுத்த வேண்டும் என்று கூறி இருக்கிறது. விலங்குகளை இயற்கையாக மதம் இன்றி வாழ விடுங்கள்.
- ♦ கோயில்களில் செல்போன் கொண்டு வர உயர்நீதிமன்றம் தடை விதித் திருப்பது நியாயம்தான். சமஸ்கிருத மந்திரங்களை கருவறைக் கடவுள்கள் நெட் வொர்க் இல்லாமலே புரிந்து கொள்ளும் போது வீணாக எதற்கு செல்போன்?
- ♦ உறுப்புகளோடும் உயிரோடும் பிறக்கும் குழந்தைகள், மத அடையாளங்களை சுமந்து வரவில்லை. அவர்களை மதத்துக்குள் இழுப்பதே கட்டாய மதமாற்றம் தான்!
- ♦ தேர்தல் பத்திரங்கள் வழியாக கடந்த 5 ஆண்டுகளில் கட்சிகளுக்கு வந்த நன்கொடை 174 கோடி ரூபாய். இதில் பா.ஜ.க.வுக்கு மட்டும் 163 கோடி (94 சதவீதம்) சும்மாவா? பசு மாடு, ராமன், பகவத் கீதை மற்றும் கார்ப்பரேட்டுகளுக்கு வாரி வழங்க பணத்துக்கு எங்கே போவது?

**– விடுதலை இராசேந்திரன் டுவிட்டரிலிருந்து**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட கலவரங்கள் நடைபெற்றுள்ளன. கிட்டத்தட்ட சுதந்திரம் கிடைத்தது முதல் காந்தி கொலை செய்யப்பட்ட காலங்களில் மட்டும் கிட்டத்தட்ட வகுப்புக் கலவரங்களால் 1700 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எதற்காக இவ்வளவு கலவரங்களை அவர்கள் செய் கிறார்கள் என்றால் ? இந்த நாடு இந்துக்களின் நாடு! இந்துக்களின் இராஷ்டிரமாக இருக்க வேண்டும். வெளியில் இருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் (முஸ்லிம், கிறித்துவர்கள்) நம் நாட்டின் வளங்களையும், கலாச்சாரங்களையும் சூறையாடி விட்டார்கள் அவர்களை வெளியேற்ற வேண்டும். என்பதே இவர்களின் கூற்று.

(அடுத்த இதழில் முடியும்)

# தலைவர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் மாவட்டம்தோறும் சுற்றுப்பயணம்

அனைத்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களுடன் கலந்துரை யாடி மாவட்ட அமைப்புகளைப் புதுப்பிக்க / மாற்றியமைக்க, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர், மாநிலப் பொறுப்பாளர்கள் கீழ்க்கண்டவாறு பயணத்துக்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

**முதற்கட்டப் பயணம்:**

16.12.2022 காலை 10.30 மணி மூ கள்ளக்குறிச்சி மாவட்டம்

16.12.2022 மாலை 4.00 மணி- விழுப்புரம் மாவட்டம்.

17.12.2022- மாலை 06.00 மணி - வேலூர் மாவட்டம்

(இரவு தங்கல் வேலூர் மாவட்டம்)

18.12.2022 காலை 10.00 மணி கிருட்டிணகிரி மாவட்டம்

18.12.2022 மாலை 04.00 மணி தர்மபுரி மாவட்டம்

**இரண்டாம் கட்டப் பயணப் பட்டியல்:**

26.12.2022 காலை 10.00 மதுரை மாவட்டம்

26.12.2022 மாலை 4.00 சிவகங்கை மாவட்டம்

26.12.2022 இரவு 07.00 மணி தஞ்சை மாவட்டம்

(இரவு தங்கல் தஞ்சை மாவட்டம் )

27.12.2022 காலை 11.00 மணி மயிலாடுதுறை மாவட்டம்

27.12.2022 மாலை 04.00 மணி கடலூர் மாவட்டம்

(இரவு தங்கல் பெரம்பலூர் மாவட்டம் )

28.12.2022 காலை பெரம்பலூர் மாவட்டம்

28.12.2022 மாலை திருச்சி மாவட்டம் (பொதுக் கூட்டம் )

மேற்கண்ட மாவட்டப் பொறுப் பாளர்கள் கூட்டம் நடைபெறும் ஊர் மற்றும் இடத்தை தலைமை நிலையத் துக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைமை நிலையம்,
திராவிடர் விடுதலைக் கழகம்
04.12.2022

# கோவை மாவட்டக் கழக முடிவுகள்

கோவை மாநகர மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் 4.12.2022 அன்று மாலை 4 மணி அளவில் மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் பா. இராமச்சந்திரன் தலைமையில் மாநில அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி, கழகப் பொருளாளர் சு. துரைசாமி ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

- பெரியார் முழக்கம் சந்தா சேர்த்து டிசம்பர் இறுதிக்குள் தலைவரிடம் ஒப்படைப்பது.
- டிசம்பர் 6 / டிசம்பர் 24இல் அம்பேத்கர்/பெரியார் நினைவு நாட்களில் வீரவணக்கம் செலுத்துவது.
- கோவையில் கழகத் தோழர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடத்துவது
- கோவை மாநகரப் பொறுப்புகள் அனைத்தும் கலைக்கப்பட்டன.
- கோவை மாநகர. தற்காலிக அமைப்பாளராக நா.வே.நிர்மல் குமார் நியமிக்கப்படுகிறார்.
- கோவை மாநகரில் தோழமை இயக்கங்கள், கட்சிகள் நடத்தும் எந்த நிகழ்ச்சியானாலும் மாநகரத் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கலந்து கொள்வதாக இருந்தால் அமைப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றே கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

# சேலம் மாவட்டக் கழகம் சார்பில் அய்ந்தாண்டு சந்தா 50 ஒப்படைப்பு




கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் 75ஆவது பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில் சேலம் மாவட்டத்தின் சார்பில் 100 அய்ந்தாண்டு புரட்சி பெரியார் முழக்க சந்தா தொகையை வழங்குவது என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் முதல் தவணையாக 50 புரட்சி பெரியார் முழக்கத்திற்கான 5 ஆண்டு சந்தா தொகை ரூ.75000 – த்தை கழகத் தலைவர் அவர்களிடம் நவம்பர் 26 ஆம் தேதி, ஜலகண்டாபுரம், சட்ட எரிப்பு நாள் பொதுக்கூட்டத்தில் வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 08th December 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN